# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக

# செய்தி மடல்

செய்தி 17 மடல் 6 ஜூன் – 2017 ₹1.00


## ஏழாவது செயற்குழுக் கூட்டம்



கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத் தளத்தின் 7ஆவது செயற்குழுக் கூட்டம், பல்கலைக்கழகத்தின் பரிமாற்றத் தளத்தின் கருத்தரங்கக் கூடத்தில் 26.05.2017அன்று நடைபெற்றது. கூட்டத்திற்குத் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர், புதுதில்லி இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம், உயிர்த்தொழில்நுட்பத் துறையின் ஆலோசகர் முனைவர் எஸ்.ஆர். ராவ் ஆகியோர் தலைமை வகித்தனர். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பரிமாற்றத் தளத்தில் உருவாக்கப்பட்ட "ஏ1/ஏ2 கண்டுபிடித்தல், நாய்களுக்கான நவீனக் குளியல், நாய்களைத் தாக்கும் இருமுக்கிய வைரஸ் நோய்களைக் கண்டுபிடித்தல்" ஆகிய மூன்று தொழில்நுட்பங்களை வெளியிடப் புதுதில்லி உயிர்த்தொழில்நுட்பத் துறையின் ஆலோசகர் முனைவர் எஸ்.ஆர். ராவ் அவர்கள் பெற்றுக்கொண்டார். கூட்டத்தில் புறநிலை வல்லுநர்களாக மைசூரு, பாதுகாப்புத் துறையின் உணவு ஆராய்ச்சி ஆய்வகத்தின் முன்னாள் இயக்குநர் முனைவர் எச்.வி. பத்ரா, புதுதில்லி, தேசிய நோய்த்தடுப்பியல் நிலையத்தின் முன்னாள் இயக்குநர் முனைவர் எஸ்.கே. குப்தா ஆகியோரும் பல்கலைக்கழக வல்லுநர்களாக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன், கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் பி.ஐ. கணேசன், கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத் தளத்தின் திட்ட இயக்குநர் முனைவர் ஜி. தினகர்ராஜ் ஆகியோரும் பங்கேற்றனர்.

## அனைத்திந்திய ஒருங்கிணைவு ஆராய்ச்சித் திட்டங்களின் ஆய்வுக் கூட்டம்




2016–17ஆம் ஆண்டில் கால்நடைகளில் இனப்பெருக்கத் திறனை அதிகப்படுத்துவதற்கு ஊட்டச்சத்து மற்றும் உடலியங்கியல் முறைகள் குறித்த இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் அனைத்திந்திய ஒருங்கிணைவு ஆராய்ச்சித் திட்டங்களின் ஆய்வுக் கூட்டத்தின் துவக்க விழா 18.05.2017அன்று சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து, ஆற்றிய தமது தலைமையுரையில் நாடு வறட்சியையும் பசுந்தீவனப் பற்றாக்குறையையும் எதிர்நோக்கியுள்ள தற்போதைய சூழலில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார். மேலும், 2016–17ஆம் ஆண்டு முன்னேற்ற அறிக்கையை வெளியிட்டார். புதுதில்லி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் துணைத் தலைமை இயக்குநர்(மீன்வளம் மற்றும் கால்நடை அறிவியல்) முனைவர் ஜாய்கிருஷ்ணா ஜெனா அவர்கள் விழாவில் பங்கேற்று, கால்நடைப் பண்ணையாளர்களின் பிரச்சனைகளைப் போக்கப் பல்வேறு மையங்களின் அறிவியலாளர்கள் ஒன்றிணைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் முன்னாள் உதவித் தலைமை இயக்குநர் முனைவர் ஓ.பி. தாண்டா, தற்போதைய உதவித் தலைமை இயக்குநர் முனைவர் பி.எஸ். பிரகாஷ், பெங்களூரு, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய ஊட்டச்சத்து மற்றும் உடலியங்கியல் நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் ராகவேந்திர பாட்டா ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றனர். மேலும், திட்டத்தில் பங்கேற்றிருக்கிற 12 மையங்களின் முதன்மை ஆராய்ச்சியாளர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் ஈனியல் மற்றும் இனப்பெருக்கத் துறையின் பேராசிரியர் மற்றும் முதன்மை ஆராய்ச்சியாளர் முனைவர் க. குலசேகர் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். காட்டுப்பாக்கம், மையத் தீவனத் தொழில்நுட்பப் பிரிவின் பேராசிரியர் மற்றும் தலைவர் மற்றும் இணை ஆராய்ச்சியாளர் முனைவர் எல். இராதாகிருஷ்ணன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

## மண்டலச் செயற்கை முறைக் கருவூட்டல் மையம் – திறப்பு விழா



தேசிய மாட்டின இனவிருத்தித் திட்டம் மற்றும் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதியுதவியுடன் ரூபாய் 50.00 இலட்சம் மதிப்பீட்டில் 2884 சதுர அடியில் மண்டலச் செயற்கை முறைக் கருவூட்டல் பயிற்சி மையம் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் கட்டப்பட்டுள்ளது. இம் மையத்தைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 15.05.2017அன்று திறந்துவைத்தார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர் முனைவர் க.ந. செல்வக்குமார் அவர்கள் பங்கேற்றார்.

### சிகிச்சை தொடர்பான உள்ளிருப்புப் பயிற்சி



பல்கலைக்கழகத்தின் சிகிச்சையியல் இயக்குநரகம்மூலம் வங்காள தேசத்தின் சிட்டகாங் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்குச் சிகிச்சை தொடர்பான உள்ளிருப்புப் பயிற்சி 22.04.2017 முதல் 22.05.2017 வரை அளிக்கப்பட்டது. மொத்தம் 62 மாணவர்கள் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றின் கால்நடை மருத்துவச் சிகிச்சை கற்பிக்கும் வளாகம் மற்றும் துறைகளில் பயிற்சி மேற்கொண்டனர். மாணவர்கள் சமர்ப்பித்த சிகிச்சை விளக்கங்கள் வல்லுநர்கள்மூலம் மதிப்பீடு செய்யப்பட்டன. 23.05.2017அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பங்கேற்றுத் தலைமையுரை ஆற்றி, சிறந்த சிகிச்சை விளக்கங்களுக்குப் பரிசுகள் அளித்துப் பயிற்சியில் பங்கேற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் (கூடுதல் பொறுப்பு) முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் (பொ.) முனைவர் எஸ்.என். சிவசெல்வம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் செசிலியா ஜோசப் அவர்கள் பயிற்சி அறிக்கை அளித்தார்.

### மாணவர் ஊக்கப்படுத்தல் பயிற்சி

பல்கலைக்கழக மாணவர் கலந்தாய்வு மற்றும் வேலைவாய்ப்புப் பிரிவுமூலம், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்களுக்கு "ஊக்கப்படுத்தல் பயிற்சி" 25.04.2017 மற்றும் 26.04.2017ஆம் நாள்களில் அளிக்கப்பட்டது. இந்த இரு நாள் பயிற்சியில் உரையாடல் திறன், இலக்கு நிர்ணயித்தல், ஊக்கப்படுத்தல் மற்றும் தொழில் வாய்ப்புகள் குறித்த அமர்வுகள் இடம்பெற்றன. ப்ரீ லான்சர்ஸ் திரு. ஜெ. ரவீந்திரன் மற்றும் திரு. ஏ. டேவிட் மோகன், என்எல்எப் பயிற்றுநர் திரு. கணேஷ், அண்ணா பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழகத் தொழில் கூட்டிணைவு மையத்தின் கூடுதல் இயக்குநர் முனைவர் டி. கலைச்செல்வன் ஆகியோர் வல்லுநர்களாகச் செயல்பட்டனர். பல்கலைக்கழகத்தின் தேர்வாணையர் மற்றும் பல்கலைக்கழக மாணவர் கலந்தாய்வு மற்றும் வேலைவாய்ப்புப் பிரிவின் நிர்வாகக் கட்டுப்பாட்டாளர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உடலியங்கியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் மற்றும் பல்கலைக்கழக மாணவர் கலந்தாய்வு மற்றும் வேலைவாய்ப்புப் பிரிவின் பல்கலைக்கழக ஒருங்கிணைப்பாளர் முனைவர் வி. லீலா மற்றும் குழுவினர் பயிற்சியை ஒருங்கிணைத்தனர். மொத்தம் 110 பி.வி.எஸ்சி மற்றும் ஏ.எச். (2013–14ஆம் சேர்க்கையாண்டு) மாணவர்கள் பயிற்சியில் பங்கேற்றனர்.

### உலகக் கால்நடை மருத்துவ நாள்

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் "நோய் தாக்கும் நுண்ணுயிரிகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த விடாமல் செய்யும் தடுப்பாற்றல்" என்ற மையப் பொருளில் உலகக் கால்நடை மருத்துவ நாள்–2017, 15.05.2017அன்று கொண்டாடப்பட்டது. ஸ்ரீ முகாம்பிகா மருத்துவக் கல்வி நிலையத்தின் நுண்ணுயிரியியல் துறைப் பேராசிரியர் முனைவர் ஆர். நெப்போலியன் அவர்கள் "மருந்துகளை வலுவிழக்கச் செய்யும் காரணிகள்" குறித்து விரிவுரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் மா. திருநாவுக்கரசு அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றினார். முன்னதாக, கால்நடை நுண்ணுயிரியியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஜெ. ஜான்சன் ராஜேஷ்வர் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கால்நடை ஒட்டுண்ணியியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் டி. அண்ணா அவர்கள் நன்றி கூறினார்.

### பயிலரங்கு



மாதவரம், கால்நடைப் பண்ணைப் பயிலக வளாகத்தில் "கறவை மாட்டுப் பண்ணையில் நலத்தை மேம்படுத்துவதற்கான நவீன உத்திகள்" குறித்த ஒரு நாள் பயிலரங்கு 30.05.2017அன்று நடைபெற்றது. கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவண குமார் அவர்கள் "பண்ணைப் பராமரிப்பில் நல மேலாண்மை" குறித்துச் சிறப்புரை ஆற்றினார். கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத் தளத்தின் திட்ட இயக்குநர் முனைவர் ஜி. தினகர் ராஜ் அவர்கள் "கறவை மாடுகளின் பண்ணைப் பராமரிப்பை மதிப்பிடுவதில் புதிய தொழில்நுட்பங்கள்" குறித்து உரையாற்றினார். மடிவீக்க நோய் மற்றும் இரத்தத்தில் கீட்டோன் செறிவு நிலையைக் கண்டறிவதற்கான பல்வேறு நோய் கண்டறியும் கருவிகளின் பயன்பாடு மற்றும் கறவை மாடுகளில் சினைப் பருவத்தை ஒருங்கிணைத்தல் கருவியின் பயன்பாடு குறித்துச் செயல்விளக்கம் செய்து காட்டப்பட்டது. கால்நடைப் பண்ணைப் பயிலக வளாகத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் அவர்கள் பயிலரங்கிற்கு ஏற்பாடு செய்தார். பயிலரங்கில் மொத்தம் 25 கறவை மாட்டுப் பண்ணையாளர் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

### பயிற்சி

- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உற்பத்திப் பொருள்கள் தொழில்நுட்பத் (இறைச்சி அறிவியல்) துறைமூலம் கோழி வளர்ப்புத் தொழில்முனைவோர் நலன் கருதி "கோழி இறைச்சிப் பதப்படுத்தல் மற்றும் மதிப்புக் கூட்டிய இறைச்சிப் பொருள்கள்" குறித்த செய்முறைப் பயிற்சி 03.05.2017முதல் 05.05.2017வரை அளிக்கப்பட்டது.
- பல்கலைக்கழகமும் பெங்களூரு, மத்திய கோழியின அபிவிருத்தி அமைப்பு மற்றும் பயிற்சி நிறுவனமும் இணைந்து கோழி வளர்ப்புத் தொழில்முனைவோர்க்காக ஆறு நாள் பயிற்சியை ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைப் பண்ணைப் பயிலக வளாகத்தில் 08.05.2017முதல் 13.05.2017வரை நடத்தின. பயிற்சியில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியின் காரைக்காலைச் சார்ந்த 70 தொழில்முனைவோர் பங்கேற்றனர்.
- தருமபுரி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் தருமபுரி மாவட்டத்தின் 48 புதுவாழ்வுத் திட்டப் பயனாளிகளுக்குக் "கறவை மாடு வளர்ப்பு" பயிற்சி, இருளப்பட்டி கிராமத்தில் 11.05.2017அன்று அளிக்கப்பட்டது. மேலும், இம் மையம் வாப்ஸ்–தொண்டு நிறுவனத்துடன் இணைந்து நடூர் கிராமத்தில் 29 விவசாயிகளுக்கு 19.05.2017அன்று "கறவைமாடு வளர்ப்பு" பயிற்சி அளித்தது.
- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதியுதவியில் "ஊரக இந்தியாவில் பல்நோக்குச் செயற்கை முறைக் கருவூட்டல் தொழில்நுட்பர்" திட்டத்தின்கீழ் "மாடுகளில் செயற்கை முறைக் கருவூட்டல்" பயிற்சி 17.04.2017முதல் 16.05.2017வரை நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் மா. திருநாவுக்கரசு அவர்கள் பயிற்சியைத் துவக்கிவைத்தார். மொத்தம் 40 பேர் பயிற்சியில் பங்கேற்றனர்.
- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை இனப்பெருக்கவியல் மற்றும் ஈனியல்

துறையில் ஒரு மாத கால "மாடுகளில் செயற்கை முறைக் கருவூட்டல்" பயிற்சி 17.04.2017 முதல் 16.05.2017 வரை நடைபெற்றது. பயிற்சிக்குத் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை நிதியுதவி அளித்தது. பயிற்சியில் மொத்தம் 27 பயனாளிகள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை இனப்பெருக்கம் மற்றும் ஈனியல் துறையில் தேசிய மாட்டின இனவிருத்தித் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதியுதவியில் ஒரு மாத கால "மாடுகளில் செயற்கை முறைக் கருவூட்டல்" பயிற்சி 28 வேலைவாய்ப்பு இல்லாத கிராமப்புற இளைஞர்களுக்கு 24.04.2017முதல் 23.05.2017வரை நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் (பொறுப்பு) முனைவர் ஜி.ஏ. பாலசுப்பிரமணியம் அவர்கள் பயிற்சியின் நிறைவு விழாவில் பங்கேற்றுப் பயிற்சியாளர்களுக்கு உதவித்தொகை வழங்கி, அனைத்துப் பயிற்சியாளர்களும் பயிற்சி நெறிமுறை தவறாது களப் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

## இடுபொருட்கள் வழங்கல் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஹேண்ட் இன் ஹேண்ட், இந்தியா என்ற தொண்டு நிறுவனம், நபார்டு வங்கி ஆகியவை ஒருங்கிணைந்து தத்தெடுப்புக் கிராமமான பச்சமலையில் பழங்குடி விவசாயிகளுக்கு மருந்துத் தெளிப்பான், இயற்கை உரம், கவாத்து கருவி, விதைகள் ஆகிய இடுபொருட்களை 12.05.2017அன்று வழங்கின. மேலும், வேளாண் மற்றும் சார்புத் தொழில்களுக்காக ரூபாய் 4.8 இலட்ச மதிப்பில் கடனுதவி 24 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு நபார்டு வங்கியின் முதன்மைப் பொது மேலாளர் திரு. நாகூர் அலி ஜின்னா அவர்களால் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்குத் ஹேண்ட் இன் ஹேண்ட், இந்தியா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி முனைவர் ஜெயசீலன் அவர்கள் தலைமை தாங்கினார். மேலும் கூடமலையில் உள்ள நிலமற்ற விவசாயிகளுக்குக் கால்நடை வளர்ப்பு பற்றிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி 24.05.2017 அன்று அளிக்கப்பட்டது.

## வெறிநோய்த் தடுப்பூசி முகாம்

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் தஞ்சாவூர், விலங்கு வதைத் தடுப்புச் சங்கமும் இணைந்து செல்லப் பிராணிகளுக்கான இலவச வெறிநோய்த் தடுப்பூசி விழிப்புணர்வு முகாமை 28.05.2017அன்று நடத்தின. முகாமில் மொத்தம் 165 நாய்களுக்கு வெறிநோய்த் தடுப்பூசி அளிக்கப்பட்டது.

## நாட்டுக் கோழிகளுக்கான நோய்த் தடுப்பு முகாம்

ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரிமூலம் கிராமத் தத்தெடுப்புத் திட்டத்தின் கீழ் இலவசமாகக் குடற்புழு நீக்கம் மற்றும் வெள்ளைக் கழிச்சல் நோய்த் தடுப்பு முகாம் 31.05.2017அன்று சொல்லேபுரம் கிராமத்தில் நடத்தப்பட்டது. முகாமில் மொத்தம் 347 நாட்டு, கலப்பினக் கோழிகளுக்குக் குடற்புழு நீக்கம் மற்றும் தடுப்பூசி மேற்கொள்ளப்பட்டது. மேலும், "புறக்கடை வளர்ப்பு முறையில் நோய்க் கட்டுப்பாடு மற்றும் அதனைத் தடுக்கும் முறை" பற்றி விளக்கவுரை வழங்கப்பட்டது. மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர் உள்பட 127 பேர் பயனடைந்தனர்.

## உலகப் பால் தினம் –2017

திருவண்ணாமலை, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமும் திருவண்ணாமலை மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து "பாலை உயர்த்துதல்" என்பதை மையமாகக் கொண்டு உலகப் பால் தினம்–2017ஐ 01.06.2017அன்று இனாம் காரியந்தல் கிராமத்தில் கொண்டாடின. நிகழ்ச்சியில் 90 விவசாயிகள் பங்கேற்றனர்.

### முதன்மையான பல்கலைக்கழக நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| 04.05.2017 | : | பல்கலைக்கழகத் திட்டக் குழுக் கூட்டம் |
| 11.05.2017 | : | மருத்துவமனை மேலாண்மைக் குழுக் கூட்டம் |
| 30.05.2017 | : | பல்கலைக்கழக அதிகாரிகள் கூட்டம் |

## பல்கலைக்கழக முதன்மை மட்டைப்பந்துப் போட்டி–2017



பல்கலைக்கழகக் கல்லூரிகளின் ஆசிரியர்களுக்கிடையே "பல்கலைக்கழக முதன்மை மட்டைப்பந்துப் போட்டி–2017" நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 12.05.2017முதல் 14.05.2017வரை நடைபெற்றது. போட்டியில் பல்கலைக்கழகத்தின் கல்லூரிகளான சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி; திருநெல்வேலி, ஒரத்தநாடு மற்றும் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள், பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணைகள், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள், கோடுவெளி உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றைச் சார்ந்த ஆறு அணிகள் பங்கேற்றன. 14.05.2017அன்று நடைபெற்ற போட்டியின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் முதன்மை விருந்தினராகப் பங்கேற்றுப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் க.ந. செல்வக்குமார் அவர்கள் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்றார். நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய விளையாட்டுச் செயலாளர் முனைவர் கு. சுகுமார் அவர்கள் விளையாட்டுப் போட்டி அறிக்கை சமர்ப்பித்தார். போட்டியில் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் முதல் இடத்தையும் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இரண்டாவது இடத்தையும் கைப்பற்றியது. மேலும் போட்டியின் தொடர் நாயகன், சிறந்த மட்டையாளர் மற்றும் சிறந்த தடுப்பாளருக்கான பரிசு ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மருத்துவர் பி. தமிழ்மகனுக்கும் சிறந்த பந்து வீச்சளருக்கான பரிசு திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முனைவர் ஆ. செல்லபாண்டியனுக்கும் வழங்கப்பட்டன. போட்டியை நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் ஒருங்கிணைத்து நடத்தினார்.

## மாணவர்களின் சுவர் ஓவியங்கள்

மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இளநிலைப் பட்ட மாணவர்கள் அக்கல்லூரி வளாகத்தில் உள்ள தேசிய வேளாண் ஆராய்ச்சித் திட்ட விருந்தினர் இல்லத்தின் சுவரில் ஓவியம் தீட்ட ஊக்குவிக்கப்பட்டனர். வரையறுக்கப்பட்ட குறைந்த கால அளவில் ஓவியம் தீட்டுதல் நிறைவடைந்து, பல்கலைக்கழக முதன்மை மட்டைப்பந்துப் போட்டி தொடங்குவதற்கு முன் தயாராயிற்று. ஓவியம் தீட்டிய மாணவர்கள் அனைவராலும் பாராட்டப்பட்டனர்.

## வளாகத் தூய்மைக்குப் பாராட்டு

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் வளாகத் தூய்மை மற்றும் அழகுபடுத்தலுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அங்கீகரிக்கும் வகையில் 01.05.2017அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் திருநெல்வேலி ரோட்டரி சங்கம் கல்லூரி முதல்வர் முனைவர் மா. திருநாவுக்கரசு அவர்களைப் பாராட்டியது.

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.

Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17
Registration No.TN/TBM/32/2015-17

Posted on 29.06.2017 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25th and 26th of every month

Printed and Published by
Dr. S.A. Asokan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051

**Editor : Dr. S.A. Asokan,** M.V.Sc., Ph.D., **Phone : 044-2432 0411**
**E-mail : dde@tanuvas.org.in**

## பணி ஓய்வு



பல்கலைக்கழகத்தின் கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் பி.ஐ. கணேசன் அவர்கள் 31.05.2017 அன்று பணி ஓய்வு பெற்றார். 05.05.1957இல் பிறந்த இவர் மொத்தம் 32 ஆண்டும் 08 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை நோய்த் தடுப்பு மருத்துவத் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஏ.பி. நம்பி அவர்கள் 31.05.2017 அன்று பணி ஓய்வு பெற்றார். 08.05.1957இல் பிறந்த இவர் மொத்தம் 30 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.



கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் அலுவலகத்தின் நிர்வாக அலுவலர் திருமதி பி. தமிழரசி அவர்கள் 31.05.2017 அன்று பணி ஓய்வு பெற்றார். 25.05.1959இல் பிறந்த இவர் மொத்தம் 32 ஆண்டும் 09 மாதமும் பணியாற்றியுள்ளார்.



திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் அலுவலகத்தின் கணக்கு அலுவலர் திருமதி ரத்தினகுமாரி அவர்கள் 31.05.2017 அன்று பணி ஓய்வு பெற்றார். 07.05.1959இல் பிறந்த இவர் மொத்தம் 32 ஆண்டும் 11 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழக நிதி அலுவலகத்தின் கணக்கு அலுவலர் திரு. யு.பி. சங்கர் அவர்கள் 31.05.2017 அன்று பணி ஓய்வு பெற்றார். 05.05.1959இல் பிறந்த இவர் மொத்தம் 31 ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் நூலக அறிவியல் துறையின் கண்காணிப்பாளர் திரு. சி. பாஸ்கரன் அவர்கள் 31.05.2017 அன்று பணி ஓய்வு பெற்றார். 02.05.1959இல் பிறந்த இவர் மொத்தம் 25 ஆண்டும் 09 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தின் கண்காணிப்பாளர் திருமதி பி. பானுமதி அவர்கள் 31.05.2017 அன்று பணி ஓய்வு பெற்றார். 15.05.1959இல் பிறந்த இவர் மொத்தம் 25 ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழக உடைமை அலுவலகத்தின் கண்காணிப்பாளர் திருமதி எஸ். ஏஞ்லா சிங் அவர்கள் 31.05.2017 அன்று பணி ஓய்வு பெற்றார். 07.05.1959இல் பிறந்த இவர் மொத்தம் 22 ஆண்டும் 09 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழக நிதி அலுவலகத்தின் உதவியாளர் (முதுநிலை) திருமதி கே. சுலோச்சனாபாய் அவர்கள் 31.05.2017 அன்று பணி ஓய்வு பெற்றார். 26.05.1959இல் பிறந்த இவர் மொத்தம் 20 ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.



காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தின் உடனாள்(முதுநிலை) திரு. கே. தனபால் அவர்கள் 31.05.2017 அன்று பணி ஓய்வு பெற்றார். 05.05.1957இல் பிறந்த இவர் மொத்தம் 28 ஆண்டும் 09 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பொட்டனேரி, மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையத்தின் உடனாள் திரு. ஆர். முத்தாகவுண்டன் அவர்கள் 31.05.2017 அன்று பணி ஓய்வு பெற்றார். 25.05.1959இல் பிறந்த இவர் மொத்தம் 33 ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.



திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் அலுவலகத்தின் திறனறி பணியாளர் திரு. எஸ். முருகன் அவர்கள் 31.05.2017 அன்று பணி ஓய்வு பெற்றார். 30.05.1957இல் பிறந்த இவர் மொத்தம் 33 ஆண்டு பணியாற்றியுள்ளார்.

## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சு. திலகர், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் ச.அ. அசோகன்
தொலைநிலைக் கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் க. குலசேகர்
முனைவர் ஜி. சரத்சந்திரா
முனைவர் பா. டென்சிங் ஞானராஜ்
முனைவர் சி. மணிவண்ணன்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் அ. மணிவண்ணன்
முனைவர் பா. மதுகேஸ்வரன்